# கரூர் நகராட்சி
# கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2021ம் ஆண்டு ஜீன் 30ம் நாள் புதன்கிழமை மாலை 4.15 மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற சாதாரணரக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திருமதி.கே.எம்.சுதா, பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எட்., அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

1)கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கிணங்க, கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள கொரோனா வைரஸ் தொற்று பாதிக்கும் தெருக்கள் மற்றும்பொது மக்கள் அதிகமாக கூடும் இடங்கள் மற்றும் பொது கழிப்பிடங்களில் கிருமி நாசினி தெளிக்க பயன்படுத்தும் கைத்தெளிப்பான்கள் அனைத்தும் கடந்த ஓராண்டிற்கு மேலாக பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில்அனைத்து கை தெளிப்பான்கள் பழுதடைந்து பயன்படுத்த முடியாமல் உள்ளது. தற்போது கொரோனா வைரஸ் தொற்று இரண்டாம் அலை வேகமாக பரவி வரும் சூழ்நிலையில் நகர்புற பகுதியில் தினசரி அனைத்து இடங்களிலும் கிருமி நாசினிகள் தெளிக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளதால் பொது மக்களின் பொது சுகாதார நலன் கருதியும் கொரோனா தொற்று பரவாமல் கட்டுப்படுத்த வேண்டிய சூழ்நிலையினை கருதியும் மின்கலத்தால் இயங்கும் 16 லிட்டர் கொள்ளவு கொண்டகைதெளிப்பான்கள் (16 litBattery Operated and Hand Operated Spryer) 20எண்ணம்வாங்கி வழங்க துப்புரவு ஆய்வாளர் அவர்கள் குறிப்பில் தெரிவித்துள்ளார்,பொதுமக்களின் பொது சுகாதார அத்தியாவசியம் கருதி நகராட்சிகள் சட்ட விதி 1920 பிரிவு–15ன் ரூ.1.25லட்சத்தில் மின்கலத்தால் இயங்கும் 16 லிட்டர் கொள்ளவு கொண்டகைதெளிப்பான்கள் (16 litBattery Operated and Hand Operated Spryer) 20எண்ணம் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் மின்கலத்தால் இயங்கும் 16லிட்டர் கொள்ளவு கொண்டகை தெளிப்பான்கள் (16 litBattery Operated and Hand Operated Spryer) 20எண்ணம் கொள்முதல் செய்ய 17.05.2021–ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது அதன் விவரம் பின்வருமாறு.

| SI.NO | Name of the Company | Hand Sprayer (Rs.per No) |
|---|---|---|
| 1 | Sri.Kaliyamman Trading Corporation, Namakkal | 6137.60 |
| 2 | Sri. Athanur Traders, Namakkal | 6300.00 |
| 3 | Sri Akshaya Traders, Trichy | 6384.00 |

மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீகாளியம்மன் டிரேடிங் கார்பரேசன், நாமக்கல் நிறுவனத்தின் விலைவிபரம் உள்ளூர் மார்க்கெட் விலைவிபரத்திற்கு ஏற்ப இருப்பதால் பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவையான கிருமி நாசினிதெளிக்க மின்கலத்தால் இயங்கும் 16 லிட்டர் கொள்ளவு கொண்டகைதெளிப்பான்கள் (16 lit Battery Operated and Hand Operated Spryer) 20எண்ணம் கொள்முதல் செய்வதற்கு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும், பொதுசுகாதார அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு பொது சுகாதாரபணிகளுக்கு தேவையான கிருமி நாசினி தெளிக்க மின்கலத்தால் இயங்கும் 16 லிட்டர் கொள்ளவு கொண்டகை தெளிப்பான்கள் (16 lit Battery Operated and Hand Operated Spryer) 20எண்ணம்கொள்முதல் செய்ய குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Sri.Kaliyamman Trading Corporation, Namakkal ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதற்கான செலவினத் தொகை ரூ.1,22,752/–ஐ தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து பொது நிதியின் அல்லது மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்தின் நிதியில் (SDRF)கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (எச்1/5349/2021)

தீர்மானம் எண். 283 பதிவு செய்யப்பட்டது.

2)கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கிணங்க, கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்க்கொள்ள கொரோனா வைரஸ் தொற்று பாதிக்கும் தெருக்கள் மற்றும்பொது மக்கள் அதிகமாக கூடும் இடங்கள் மற்றும் பொது கழிப்பிடங்களில் கிருமி நாசினி தெளிக்க பயன்படுத்தும் விசை தெளிப்பான்கள் அனைத்தும் கடந்த ஓராண்டிற்கு மேலாக பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில்அனைத்து விசை தெளிப்பான்கள் பழுதடைந்து பயன்படுத்த முடியாமல் உள்ளது. தற்போது கொரோனா வைரஸ் தொற்று இரண்டாம் அலை வேகமாக பரவி வரும் சூழ்நிலையில் நகர்புற பகுதியில் தினசரி அனைத்து இடங்களிலும் கிருமி நாசினிகள் தெளிக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளதால் பொது மக்களின் பொது சுகாதார நலன் கருதியும் கொரோனா தொற்று பரவாமல் கட்டுப்படுத்த வேண்டிய சூழ்நிலையினை கருதியும் இலகுரக வாகனத்தில் பொருத்தி இயங்கக்கூடிய விசைத்தெளிப்பான்கள் 5எண்ணம் Spraying Hose 10No மற்றும் Spraying Gun 25No வாங்கி வழங்க துப்புரவு ஆய்வாளர் அவர்கள் குறிப்பில் தெரிவித்துள்ளார்,பொதுமக்களின் பொது சுகாதார அத்தியாவசியம் கருதி நகராட்சிகள் சட்ட விதி 1920 பிரிவு–15ன் ரூ.2.50லட்சத்தில் விசைதெளிப்பான்கள் 5எண்ணிக்கை Spraying Hose 10No மற்றும் Spraying Gun 25No கொள்முதல் செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் விசைதெளிப்பான்கள் 5எண்ணிக்கை, Spraying Hose 10No மற்றும் Spraying Gun 25No கொள்முதல் செய்ய 04.05.2021–ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது அதன் விவரம் பின்வருமாறு.

| Sl.NO | Name of the Company | Sprayer Machine (Rs.per No) | Spraying Hose (Rs.per No) | Spraying Gun (Rs.per No) |
|---|---|---|---|---|
| 1 | Sri.Kaliyamman Trading Corporation, Namakkal | 40880 | 2242 | 885 |
| 2 | Sri. Athanur Traders, Namakkal | 42000 | 2300 | 900 |
| 3 | Sri Akshaya Traders, Trichy | 42500 | 2500 | 950 |

மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீகாளியம்மன் டிரேடிங் கார்பரேசன், நாமக்கல் நிறுவனத்தின் விலைவிபரம் உள்ளூர் மார்க்கெட் விலைவிபரத்திற்கு ஏற்ப இருப்பதால் பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவையான விசைதெளிப்பான்கள் 5எண்ணம்,Spraying Hose 10No மற்றும் Spraying Gun 25No கொள்முதல் செய்ய குறைந்த விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி கிருமி நாசினி விசைதெளிப்பான்கள் கொள்முதல் செய்வதற்கு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும், பொதுசுகாதார அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு பொது சுகாதாரபணிகளுக்கு தேவையான கிருமி நாசினி விசைதெளிப்பான்கள்Spraying Hose 10No மற்றும் Spraying Gun 25No கொள்முதல் செய்து அதற்கான செலவினத் தொகை ரூ.2,48,945/– ஐ தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (எச்1/4050/2021)

தீர்மானம் எண். 284 பதிவு செய்யப்பட்டது.

3)கரூர் நகராட்சியில் உள்ள அனைத்து பிரிவுகளிலும் இயங்கி வருகின்ற கீழ்கண்ட கணிணி மற்றும் பிரிண்டர்கள் UPS மற்றும் கணிணி சார்ந்த பொருட்கள் 2021–2022ம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு (AMC) மேற்கொள்ள ஆகும் செலவினத்திற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச தொகை ரூ.9.10லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl.No. | Particulars | Qty., |
|---|---|---|
| 1 | Server with Original Antivirus software | 1 |
| 2 | System with Original Antivirus software | 73 |
| 3 | Laptop with Original Antivirus software | 2 |
| 4 | Xerox machine | 6 |
| 5 | HP Laser Jet All in one printer (Print / scan/copy) | 42 |
| 6 | HP Laser Jew M706N A3 Size Laser Printer | 5 |
| 7 | Dot Matrix Printer | 12 |
| 8 | Scanner | 2 |
| 9 | Numeric 5KVA UPS with 10 Batteries | 1 |
| 10 | Numeric 3KVA UPS with 6 Batteries | 2 |
| 11 | Networking switch and LAN cable maintenance charges | 1 |

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பிட்டுத் தொகை ரூ.9.10லட்சத்தினை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/5454/2021)

தீர்மானம் எண். 285 அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
கரூர் நகராட்சி